**PROCEEDINGS OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED PROJECT OF M/S.T.K.BHARATH ROUGH STONE AND GRAVEL QUARRY, SF.No.650, 651/1, 651/2, 652, 653/2, 654/2B2&667, EDIRKOTTAI VILLAGE, VEMBAKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT ON 25.08.2021 AT 11.00 A.M IN M/S. SRI LAKSHMI NARASIMHA PERUMAL KALYANAMANDAPAM, NO.4/1000, THAYILPATTI TO VIJAYAKARISALKULAM ROAD, KATTANANJSEVAL, THAYILPATTI, VIRUDHUNAGAR DISTRICT - 626 128**

**Present:**

**Thiruvalargal:**

| | | | |
|---|---|---|---|
| 1 | R. Mangalarama subramanian | : | District Revenue Officer/<br>Additional District Magistrate<br>Virudhunagar. |
| 2 | T. Kannan | : | District Environmental Engineer (a/c),<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar. |
| 3 | R. Pushpa | : | Revenue Divisional Officer,<br>Sattur |
| 4 | S. Thanaraj | : | Tahsildar, Vembakottai |
| 5 | K. Ganesan | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar. |
| 6 | Public | : | 82 Nos (List enclosed) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar welcomed the District Revenue Officer/Additional District Magistrate, Virudhunagar, other officials, public and project proponents who have

participated in the public hearing for the proposed project of M/s.T.K.Bharath Rough Stone and Gravel Quarry, Edirkottai Village, which is required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority, Government of Tamil Nadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in "Dinakaran" and "Indian Express" dated 20.07.2021. Also, he informed that wide publicity was given informing the details of Public Hearing by circulating phamlets in the villages nearer to the project site. Further, he stated that the arrangements for public hearing were made following the Standard Operating Procedures as stipulated in the guidelines specified in the Government of India, Ministry of Environment, Forest and Climate Change, Impact Assessment Division, Office Memorandum F.No.22-25/2020-1A.III Dated:09.06.2021. Subsequently, the DEE stated that the project proponent will make a detailed presentation on the proposed project and requested the public to express their views after completion of the presentation.

He also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponent will be recorded through videography and the same will be sent to the State Level Environment Impact Assessment Authority, Chennai.

Then, the District Revenue Officer/Additional District Magistrate, Virudhunagar initiated the Public Hearing process. Further, the District Revenue Officer/Additional District Magistrate requested the project proponent to explain about their proposed project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

After that, the Environmental consultant of the project has made detailed presentation on the project of M/s.T.K.Bharath Rough Stone and Gravel Quarry to the public along with Environmental Management Plan.

The views of the Public participated in the Public Hearing and the reply by the project proponent are detailed below.

1. **Thiru. Subburaj, Panchayat Union President, Ettakkapatti:**

He welcomed the plan to plant 500 saplings to improve the environment and protect it

2. **Thiru. Santhanam, Thayilpatti Ex Panchayat Union President:**

Licensing of stone quarries operating in and around Thailpatti will reduce the price increase. A gravel is currently being sold for Rs. 2000 to Rs. 3000. Construction work is in full swing in the surrounding areas. The cost of building a house for the poor has increased from Rs. 200000 to Rs. 600000. He therefore said that there is a possibility that the price of gravel will come down if the license to set up gravel is issued

3. **Thiru. Ganesan, Ettakkapatti:-**

Get jobs for local people. He welcomed the project

4. **Thiru. Perumalsamy, Ettakkapatti:**

He welcomes the project.

5. **Tmt. Mageshwari, Ettakkapatti:**

She welcomed the stone crusher project.

After this, since no one came forward to give opinion/view on the project, the District Revenue Officer/ Additional District Magistrate has invited the public to offer their further more views if any. Even after that, there was no further response from the public. Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar has narrated the proceedings of the public hearing conducted and concluded the public hearing with vote of thanks.

List of public participated in the public hearing along with recorded video (CD) of the entire proceedings are enclosed herewith.

District Environmental Engineer(a/c),
Tamil Nadu Pollution Control Board,
Virudhunagar.

District Revenue Officer/
Additional District Magistrate,
Virudhunagar.

திரு/ள்.டி.கே.பரத் கல் மற்றும் கிராவல் குவாரி, புல எண்.650, 651/1, 651/2, 652, 653/2, 654/2பி2 மற்றும் 667, எதிர்கோட்டை கிராமம், வெம்பக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் தொடங்கவுள்ள சுரங்கத்திட்டம் தொடர்பாக 25.08.2021 முற்பகல் 11.00 மணியளவில் திரு/ள். ஸ்ரீ லட்சுமி நரசிம்ம பெருமாள் திருமண மண்டபம், எண். 4/1000, தாயில்பட்டி-விஜயகரிசல்குளம் சாலை, கட்டனஞ்செவல், தாயில்பட்டி, விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கேட்டுணரும் கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகள்.

பங்கேற்றோர்:

திருவாளர்கள்:

| | | | |
|---|---|---|---|
| 1 | இரா.மங்களராமசுப்ரமணியன் | : | மாவட்ட வருவாய் அலுவலர்/<br>கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர்<br>விருதுநகர். |
| 2 | த.கண்ணன் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (கூ/பொ),<br>தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர். |
| 3 | ஆர்.புஷ்பா | : | வருவாய் கோட்டாட்சியர்,<br>சாத்தூர் |
| 4 | எஸ்.தனராஜ் | : | வட்டாட்சியர், வெம்பக்கோட்டை |
| 5 | க.கணேசன் | : | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர். |
| 6 | தொழிற்சாலை பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் | : | 82 எண்கள்<br>(பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) |

தி/ள்.டி.கே.பரத் கல் மற்றும் கிராவல் குவாரி மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்திலிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கேட்டுணரும் கூட்டத்திற்கு வருகை புரிந்த மாவட்ட வருவாய் அலுவலர்/கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர், விருதுநகர், ஏனைய அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலையின் பிரதிநிதிகள் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், விருதுநகர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கேட்டுணரும் கூட்டம் நடைபெறும் விபரம் ஏற்கனவே "தினகரன்" மற்றும் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 20.07.2021 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், இப்பொதுமக்கள் கேட்டுணரும் கூட்டம் நடத்துவது தொடர்பாக பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் மூலம் விரிவாக விழிப்புணர்வு மற்றும் அறிவிப்பு செய்ததைக் கூறினார். இந்த கூட்டத்திற்கான ஏற்பாடுகள் இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் தாக்க மதிப்பீடு பிரிவால் 09.06.2021 அன்று வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதிகள் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கேட்டுக்கொண்டார்.

மேலும், இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்கள் மற்றும் அது தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதிகளின் பதில் ஆகியன வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகள் உடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

பின்பு, மாவட்ட வருவாய் அலுவலர், விருதுநகர் அவர்கள் பொதுமக்கள் கேட்டுணரும் கூட்டத்தை தொடங்கி வைத்தார். மேலும், இத்திட்டத்தினுடைய பிரதிநிதிகளை திட்டம் தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறி, இத்திட்டம் தொடர்பான சந்தேகங்களையும், விளக்கங்களையும் கேட்குமாறு பொது மக்களைக்

கேட்டுக் கொண்டார்.

பின்பு தி/ள்.டி.கே.பரத் கல் மற்றும் கிராவல் குவாரியின் சுற்றுச்சூழல் ஆலோசகர் இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இது தொடர்பான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் விளக்கவுரையாற்றினார்.

அதன் பின்பு, இக்கூட்டத்தில் பொதுமக்களின் ஆலோசனைகள், கருத்துக்கள், சந்தேகங்கள் மற்றும் அது தொடர்பாக இத்திட்டத்தின் பிரதிநிதி அளித்த விபரங்கள் பின்வருமாறு.

1. <u>திரு. சுப்புராஜ், ஊராட்சி மன்ற தலைவர், எட்டக்காபட்டி</u>

சுற்றுச்சூழலை மேம்படுத்த 500 மரக்கன்றுகளை நட்டு அதனை பாதுகாக்கும்படி வேண்டினார். அவர் இத்திட்டத்தினை வரவேற்றார்.

2. <u>திரு.சந்தானம் (தாயில்பட்டி முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர்)</u>

தாயில்பட்டி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில் இயங்கும் கல்குவாரிகளுக்கு லைசென்ஸ் வழங்கினால் அதற்கான விலை ஏற்றம் குறையும். தற்பொழுது ஒரு கிராவலின் விலை ரூ.2000 முதல் ரூ. 3000 வரை விற்பனை செய்யப்படுகிறது. சுற்று வட்டார பகுதிகளில் அதிக அளவில் கட்டுமானப் பணிகள் நடந்து வருகின்றன. அவர்களுக்கு போதிய அளவு கல் கிடைக்காத பட்சத்தில் ஒரு சில குவாரிகளில் அவர்கள் நிர்ணயித்த அதிகப்படியான விலைக்கே வாங்க வேண்டியுள்ளது. கிராவலானது ஒரு யூனிட் ரூ.500 முதல் ரூ 600 வரை இருந்தது. தற்போது அதன் விலை ரூ.3000 முதல் ரூ.4000 வரை அதிகரித்துள்ளது. இதனால் ஏழை எளிய மக்கள் வீடு கட்டுவதற்கான செலவு ரூ. 200000 என்பது ரூ 600000 வரை அதிகரித்துள்ளது. ஆகவே கிராவல் அமைப்பதற்கான லைசென்ஸ் வழங்கினால் கிராவல் விலை குறைவதற்கான வாய்ப்பு உள்ளது என்பதாக கூறினார்.

3. திரு. கணேசன், எட்டக்காபட்டி

உள்ளூர் மக்களுக்கு வேலை கிடைக்கும். அவர் இத்திட்டத்தினை வரவேற்றார்.

4. திரு.பெருமாள்சாமி, எட்டக்காபட்டி

அவர் இத்திட்டத்தினை வரவேற்றார்.

5. திருமதி.மகேஸ்வரி, எட்டக்காபட்டி

இத்திட்டத்தினால் எங்களுக்கு வேலை கிடைக்கும்; மற்றும் எங்களுடைய வாழ்வாதாரம் மேம்படும்.

இதன் பின்பு, இத்திட்டம் தொடர்பான கருத்துக்கூற யாரும் முன்வராததால், மேலும் கருத்துக்களை தெரிவிக்க மாவட்ட வருவாய் அலுவலர்/கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர், அவர்கள் கேட்டுக்கொண்டார். இதன் பின்பும் யாரும் எவ்வித கருத்தும் தெரிவிக்கவில்லை. இறுதியில், கூட்டத்தில் இதுவரை நடந்த நடவடிக்கைகளை மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விருதுநகர் அவர்கள் தொகுத்துக் கூறி, கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.

கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் மற்றும் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த வீடியோ குறுந்தகடு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்(கூ/பொ),
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விருதுநகர்.

மாவட்ட வருவாய் அலுவலர்/,
கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர்
விருதுநகர்.